(ஆ) வினாக்கள்–விடைகள் நேரம் இடம்பெறாததும் விடைகளை விரைந்து அனுப்பிட அமைச்சர்கள் அறிவுரை வழங்குதலும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்களிடமிருந்து பேரவைச் செயலகத்திற்கு தற்போது வினாக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவ்விதம் வரப்பெற்ற வினாக்கள் அனுமதிக்கப்பட்டு, விடைகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. வினாக்களுக்கான பதில்களைப் பெறுவதற்கு சிறிது காலம் ஆகும் என்பதால், அதுவரையில் "ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கு ஒதுக்கப்பெற வேண்டும்" என்னும் பேரவை விதி 32-ஐப் பேரவையின் அனுமதியுடன் தளர்த்தி, சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை விதி 45-ன்படி வினாக்களுக்கான விடைகள், அவை அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். இக்கால அளவிற்குள் விடைகள் அனுப்ப இயலாத நேர்வில், அதற்குரிய காரணங்களைத் தெரிவித்து, பேரவைத் தலைவரின் இசைவுடன் மேலும் இரண்டு வார கால அவகாசத்தில் விடைகள் கொடுக்கப்படலாம். வினாக்களுக்கான விடைகளை விரைந்து அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு, துறைச் செயலாளர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(இ) செல்லிடத் தொலைபேசியை அவைக்குள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது செல்லிடத் தொலைபேசியை off செய்துவிட்டு பேரவைக்குள் வரவேண்டும். இருப்பினும் பேரவையில் சிலர் செல்லிடத் தொலைபேசியை உபயோகிப்பதாக நான் அறிகிறேன். எனவே, பேரவைக்குள் வரும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றும் அலுவல் காரணமாக வரும் அலுவலர்களும் செல்லிடத் தொலைபேசியை off செய்துவிட்டு பேரவைக்குள் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.